DEc; 1913. **Reg. No. M. 1080**

சிவமயம்

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

The "Tamilian."

A Monthly Tamil Journal.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."—குறள்.

பண்டிதர் எஸ் முத்துஸ்வாமிப் பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II } 1089 கார்த்திகை. { குதி III

பொருளடக்கம்.

		பக்கம்
(1)	அருவியன் கதை. ஸ்ரீ. K. N. சிவராஜபிள்ளையவர்கள். B. A.	65
(2)	தமிழ்மக்களின் நுண்கலைவிருத்தி. ஸ்ரீ. தி. லக்ஷ்மணபிள்ளையவர்கள். B. A.	69
(3)	இயற்கைத் தத்துவ போதம் ஸ்ரீ. தேவதாஸ் ஹேன்றியவர்கள். B. A. L. T.	73
(4)	ஓர் உபந்நியாசம். சுவாமி உருத்திர கோடீசுவரர்.	74
(5)	பிராணதீர்த்தம். ஸ்ரீ D. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள். F. T. S.	78
(6)	எலும்பின் உபயோகம்.	81
(7)	கிளி ஸ்ரீ. S. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்	83
(8)	மஹான்கள் திருவாய் மொழிகள்.	85
(9)	விலையடித்தலும் விலைபெறுதலும்.	89
(10)	ஜலவாதப்புணை.	91
(12)	சமாசாரத்திரட்டு.	95

1913.

Printed and published by S. Muthuswamy Pillai.
at the "SUNDARA" Press, Puthenchanthai, Trivandrum.

அநேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும்
பெற்ற டாக்டர் H. L. பட்லிவாலாவின்,
உலகப் பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலைசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்டமருந்து. விலை ரூபா ௧.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து. விலை ரூ ௧.

Tonic Pills:—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டுபண்ணும் குளிகைகள். விலை ரூபா ௧௰.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது, வாய்நாற்றம் பற்புழு பக்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும். விலை அணா ௪.
பெரிய பொட்டணம் அணா ௮.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தானமருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ௪.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்,

Dr. H. L. Batliwalla's Co,

Warli Labaratory, Dadar, Bombay.

சந்தாவிவரம்.

	ரூ	அ	பை
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	0
பினாங்கு. சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு.	3	0	0
தனிப்பிரதி	0	4	0

குறிப்பு, முதல்மூன்று மாதங்களுக்குள் ஒருவருஷ சந்தா முன்னதாகச் செலுத்தும் சந்தாதார்களும் போஷகர்களுக்கும். 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒருபிரதி இனாமாகக்கொடுக்கப்படும்,

(2) அடுத்தஜனவரி மாதம்முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit. S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.

சிவமயம்

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

The "Tamilian."

A Monthly Tamil Journal.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."—குறள.

பண்டிதர். எஸ். முத்துஸ்வாமிப் பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II } 1089 கார்த்திகை. { பகுதி III

அருவியன் கதை

—:[:o:]:—

(35— பக்கத்தொடர்ச்சி.)

பதிநடுவூடு செல்லும் பாதையொன் றுளதாம், பாங்கர்
வதியுமோர் கானமேகும்; மானினி வளங்கள் காண
அதிசயமெய்தியாங்கே அன்பனை அழைத்துப் புக்காள்;
புதியனவாகும்காட்சி பூவையர் விடுவரோ காண்? (37)

பாதையினருகு பூத்த பன்மலர் நறவினோடு
தாதுகுத் தினியதோழர் தங்கழல் விளக்கி" எம்பால்
போதுனீர், ஏழையோம் என்புரிகுவெம்? மனதில் நல்லீர்
ஏதஞ்செய்யாதிர் "என்றே இன்னகை யரும்பிநின்ற. (38)

கொம்பனாள் வருதல்நோக்கிக் கோடியனார் ஒசிந்து "தோழீ
வம்பவிழ் மரங்களென்னும் வரையாம் தழுவி நின்றோம்,
அம்புவிக் கழகுசெய்யும் அருவியன் தடந்தோளார்வத்
திம்புறத் தழுவிக்கொண்டாய்" என்றடி இறைஞ்சிநின்றார். (39)

பஞ்சினிற் பனிக்கும்நொய்ய பதயுகம் பதைக்குமென்ன
அஞ்சிப்பூங் கொம்பனாரும் அலர்மழை வழியில்தூவி
" கஞ்சமென் முகத்தாய் கானங்காணிய வந்தாய்கொல்லோ ?
வஞ்சகமறியாய்! இங்ஙன்வருந்தவோ வந்தாய் ?" என்றார். 40)

காதலன் கையில்தன்கை கனிவினில் பிணித்துமெள்ள
மாதவள் நடந்தாளேனும் மாழ்கினள், மருங்குல்வாடி
வேதனை யுழன்றாள், முத்த வேர்வினைப் பொடித்தாள் மேனி,
ஆதலினன்றே மந்த மாருதம் அசையாநிற்கும். (41)

செடிகளாம் தெரிவைமாரும், திருமலர்தூவிச் சாலும்
கொடிகளாம் பேதைமாரும், கொம்பெனும் பெதும்பைமாரும்.
முடிகளால் மங்கைக்கெங்கும் முறைப்படி சிறப்புக்காட்ட
கடிமலர்க் குழலினாளும் காந்தனும் கானம்புக்கார். (42)

(வேறு)

பாசியின் கறைபடர் பாறை உள்ளது ,
தூசியின் அம்பரம் தொடரும் குன்றது ,
காசலாம் வரை அலங்காரம் உள்ளது ,
மாசலாம் லோபரில் மானும் மாண்பது. (43)

குன்றின்வீழ் அருவியின் குரவை சார்வது ;
பொன்றிணி மணல்தடம் புனையும் கோட்டது ,
என்றும்நீர் பாய்தரும் யாறும் எற்பது ,
கன்றுணும் கரையெலாம் பசுமை கால்வது, (44)

கண்ணகன் நளிர்சுனை கதுவும் கானது,
விண்ணகன் நெடுமரம் மிடையும் காவது ,
மண்ணகன் மாட்சியும் மணமும் சான்றது ;
எண்ணரும் இருள்ப்பிழம் பிடையும் வைப்பது. (45)

தாவிவீழ் மாருதம் தடியும் சார்பது ,
ஓவியப் புள்பல உலவும் கொம்பது ;
கூவுதல் தாவுதல் குழைதல் புல்லுதல்
மேவுதல் உற்றது ; மிளிரப் பெற்றது. (46)

உள்ளினில் உவகையோ டுழவை மாமரை
துள்ளிவீழ் தடமது, துளக்கம் செய்வது,
நள்ளிருள்ப் பேயோடு நடக்கும் கண்டகக்
கள்ளர்கள் திரிதரும் கடுமை சான்றது. (47)

இத்தகை வனத்தில் எற்புலரிக் காலத்தே
உத்தமியாம் உருதேசி மாதராள்
வித்தகனேடுற, மிளிர் பூங் கானமும்
எத்துணை நின்ற திங்கியம்பு வாமரோ ! (48)

(வேறு)

சந்தநீள் தருவாந் தாங்குகா லோங்க,
தழைதரு பாசிலைக் கொம்பாம்
பந்தல்மேல் விரித்துப், பழமொடு பூவில்
பற்பல தீபமும் நாற்றி,
செந்திருப் பதங்கள் நொந்திடா வண்ணம்
சீர்கெழு புல்விரி வீழ்த்தி,
பைந்தொடி கானப் பாவையும் இவளைப்
பரிவுகூர்ந் தழைத்து நின்றனளே. (49)

அழகென்ப தொருசார் அவிர்ந்திட, ஒருசார்
அழகென்ப தடங்கிட, அருகே
அழகென்ப வளர, அழகென்ப தளர,
அழகென்ப அசைந்திட, அன்றி
அழகென்ப ஓட, அழகென்ப ஒலிப்ப,
அழகென்ப தூங்கியே சலிப்ப,
அழகென்ப யாவும் அவ்வன மங்கை
அணிந்தனள் காதலர் அழைப்பான். (50)

பாசிலை ஆகும் தூசினைப் புனைந்து,
பம்புநல் மலரணி திருத்தி,
ஏசலில் மனத்தின் இன்கனிகனிந்தே எழில்
முகையெனும் நகை அரும்பி,

மாசறு கந்தப் பொற்பொடி தூவி,
"வருக"! என்றழைப்பபோல் கூவி,
வீசிய கொம்பாம் கைகளால் அவளை
விளித்தனள் தரு எனுந்தருணி. (51)

பெரியவர் செய்யும் பெருமையே போல
பெரியவர் எனும்பெயர்க் கீண்டு
உரியவ ராவர் சிறியவர் சிறப்பும்
ஓகையோ டேற்றிடு வாரால்,
அருகுறை சேடியாள் அகமகிழ் தூங்கி
ஆடினள், அலர்ந்த வள்ளத்தே
முருகுறை தாது மூடினள், திறந்தாள்;
மோதத்தின் செயல் மொழிகுவதோ? (52)

மாமெனும் உளத்தோர் மகிழ்ந்திடில் மெல்லென்
மனத்தியர் எவ்வணும் வாயாத்
தாமெனும் தொய்யல் தாங்குவர், ஐயம்
சாலுமோ? சார்வுள கோடியார்
வரனொடு மங்கை வருதலும் நோக்கி,
வாய்த்தபேர் வழுதெனக் காட்டா,
இரமெனும் நெஞ்சம் இன்புறை ஒழுக
இழிகணீர் வாரமே லொசிந்தார். (53)

தண்ணெகு நெஞ்ச மோதகைமீற, சடலமீக்
கசிந்து, தம் முகங்கள்
ஒண்ணில வனைய ஒளித்திரள் பரப்ப,
ஓதலாங் தகைமைத் தல்லாத
பெண்ணிளம் குயில்போல் இன்னிசை பெய்து,
பேரெழில் வாய்ந்தலைக் காத்தில்
எண்ணரும் வாச மலர்த்தொகை ஏந்தி
ஏரியாம் நாரியர் எதிர்ந்தார். (54)

ஓடைதண் முதுகர்ஒடியும் ஒலியா
உவதை தூந்திவலை நீர்க் கொண்டும்,
ஏடவிழ் மலர்வாசம் நனி மொண்டும்,
இன்னென இயம்ப வொண்ணாது

ஆடவர் மகளிர்க் ககமே தீமூட்டும்
அம்முது குன்றுவாங் தென்றல்
சேடவிர் கானம் சீரியர் அண்ம
திகழ்ந்தது களிர்ப்புது மணமே. (55)

(தொடரும்.)

K. N. சிவராஜபிள்ளை, B. A.

——(:o:)——

தமிழரின் நுண்கலைவிருத்தி
(39-வது பக்கத்தொடர்ச்சி)

——:::——

இப்படி நியாயமான மாற்சரியம் அபிவிர்த்திக்கு ஒரு காரணமா யிருக்க, அது பொறாமை, பகை, முதலிய உணர்ச்சிகளைப் போல இகழத்தக்கதன்று. பொறாமை என்பதற்கும், மாற்சரியம் என்பதற்கும், மிகுந்த வித்தியாசமுண்டு. மாற்சரியம், இங்கிலீஷில் (Emulation) மற்றொருவரைப்போல் நாம் உயர்ச்சியடைய ஆவலிக்குந்தன்மையாம். பொறாமை என்பது மற்றொருவரிடத்தில் நம்மைவிடத் தகுதி இருப்பதைப்பார்த்து உள்ளெரிவதும, அதைப்போல தகுதியடைய முயற்சியொன்றும் செய்யாமலோ, அதற்குச் சக்தியற்றோ, இருந்துகொண்டு, அத்தகுதியை இகழவோ, குறைக்கவோ, நினைக்குந் தன்மையாம். பின்னது மிகுந்த கேடு விளைக்குங்குணம், முன்னது நன்மையை விளைப்பது. நமது அத்வைத சாஸ்திரங்களில், காம, குரோத, லோப, மத, மாற்சரியங்களென்று மாற்சரிய குணம் இகழ்ந்து கூறப்பட்டுள்ளது. ஆனால், உலக வியாபாரத்தில், முன் சொன்னதுபோல், இக்குணம் அபிவிர்த்திக்கு வித்தா யிருக்கின்றது. பொறாமையென்பதை யொழித்து மாற்சரியம் மட்டும் கொள்ளுதல் நன்மையை விளைக்கும். எல்லாப் பற்றுமற்று, துறவு பூண்பவர்க்கே இக்குணம் அற்றிருத்தல் வேண்டுமென்று சொல்லத்தகும். இல்லற வாழ்வை யடைந்து, உலகத்தில் அறிவும், அபிவிர்த்தியும், உலக சுகமும் பெருகவேண்டுமென்று எண்ணுபவர்களுக்கு, அந்த அத்வைத நோட்டம் உதவாது. எல்லாப்பற்றுமற்றுவிட்டு நிற்பவர் உலகத்தில் சிறுபான்மையோரே. ஆகலால், உலகத்தில் பெரும்பான்மையோர்க்கும் நியாயமான மாற்சரியம்வேண்டுமென்றும், பொறாமையோ, பகையோ, கொள்ளக்கூடாதென்றும், கூறுவதே ஜனங்களுக்கு நல்ல உபதேசமாகும். விசேஷமாய், இந்த நுண்கலைகள் விஷயத்தில் மாற்சரியம் வேண்டியே இருக்கின்றது. அத்வை

தங்கொள்கையை இவ்விஷயத்தில் காட்டிவிட்டால், அபிவிர்த்தி யென்பது சூன்யமாகும். எப்போது ஆடையணிதலும், நகையணிதலும், நன்மையென்று கொள்ளப்பட்டதோ, அப்போது சேர்த்தியான ஆடையும், அழகானநகையும் அதிகநன்மைக்கு, அதாவது, அதிகசுகத்திற்குக் காரணமாகுமென்று கொள்ளவேண்டியது. நாடகமியற்றல் மனிதர் இயற்கையை எடுத்துக் காட்டி உலக அறிவையும், அதனால் வரும் நன்மையையும், விளக்குமென்று கொள்வோமானால், உயர்தர நாடகங்கள் இயற்றுவதினால், அவ்வித உயர்தர அறிவையும், உயர்ந்த நன்மையையும், அது பயக்குமென்று திண்ணமாய்க் கொள்ளவேண்டும். உணவு மனிதர் வாழ்க்கைக்கு இன்றியமையாதிருக்க, அது ஒரு நல்ல சாதனமென்று கொள்வோமானால், சுவையுள்ளதும், குற்றமற்றதுமாகிய உணவு அதிக நல்லதென்றும், அதாவது, அதிக சுகத்தை விளக்குமென்றும் கொள்ளுவது நியாயமே. வாழ்வின் சுகத்தை நாடியே உலகில் பெரும்பான்மையான உயிர்களும் உழைக்கின்றவென்பது நமக்குத் திருஷ்டாந்தப் படுவதினாலும், உலகத்தில் அவ்வித சுகத்தை அதிகப் படுத்துவதற்குப் பெருமுயற்சி எடுத்தவர் உலகில் பெரியோரெனப் புகழ்ப்பெற்று வருகின்றனராதலாலும், உலக வாழ்க்கை இன்பத்தை முற்றிலும் ஒழிப்பது இல்வாழ்வார்க்குத் தகுதியன்று. அப்படி இன்பம் நாடுதல், நியாயமான வழியிலும், பிறர்க்குத் துன்பங்கொடுக்காமலும்,வேண்டுமென்பதே குறியாகக் கொள்ளவேண்டும்.

செயற்கரிய செய்வார் பெரியர்,சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்று திருவள்ளுவ நாயனர் கூறியிருப்பது, உலகத்தார் இன்பத்தை நாடி உழைத்து வரும் புகழையும், அப்படி உழைப்பதால் செயற்கரிய செய்தாரது பெருமையையும் குறிப்பிட்டே. ஆகையால், எவ்விதமும் நியாயமான உலக இன்பத்தை நாடுவது ஒரு காலத்தும் குற்றமாகாது.

உலக இன்பங்களில், பிறர்க்குத் துன்பம் விளைக்காது, தனிஇன்பத்தைக்கொடுக்கின்ற விஷயங்கள், மற்றெல்லாவற்றையும்விட இவ்வுபன்னியாச காரியமாகிய நுண்கலைகளேயாம். மற்றெல்லா விஷயங்களும், சொற்பமாவது துன்பம் விளையாமலிராது. இவ்விஷயங்களிலோ

உழைப்பவர்க்கும் சுகம். அவ்வுழைப்பின்பயனைப் பெறுபவர்க்கும் சுகமே விளைகின்றது. ஆகையால், இக்கலைகள் புகழத்தக்கனவேயன்றி, ஒரு விதத்திலும் இகழத்தக்கனவல்ல. இக்கலைகள் மோக்ஷவின் த்தை நேரே கொடுப்பனவல்ல என்ற ஒரு காரணத்தால், வைதீகவிர்த்தியும் வைதீக அறிவும் மாத்திரம் மேற்கொண்டிருக்கிற சில்லோர் இக்கலைகளைத்தாழ்த்திப்பேசுங்கூற்று உலகத்தோரால் ஏற்றுக்கொள்ளத்தக்கனவன்று. அது ஒரு பக்ஷப்பிடித்துப் பேசுதலேயாம். சிற்றின்பத்தைக் கிளப்புவன என்று மற்றொரு சாரார் எண்ணுவதும் பிசகே. உதாரணமாக, சங்கீதம் சிற்றின்பப் பற்றினுக்குரியதென்று முற்காலத்துச்சமணர் முதலியோர் கொண்டிருந்தது சங்கீதக்கலையைப் பற்றிய சரியான உணர்ச்சியின்மையினால் தான். சங்கீதம் பரிசுத்தமான தண்ணீர் போலேயாம். தண்ணீர் பாத்திரங்கள் கழுவுதலுக்கும் பூஜைக்கும் ஒருப்போல உதவுதல்போல், சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் உபயோகப்படுத்தக் கூடியதன்மை சங்கீதத்திற்கு மிருக்கின்றது. தெய்வ உபாசனைக்காகும் பதிகங்களுக்கும் சிற்றின்பக் கீர்த்தனைகளுக்கும் பண்கள் இசைந்து வருவன. அப்படி சிற்றின்பத்திற்கு இசைந்து வருவது அந்தக்கலைக்கொரு குறைவாகாது. அப்படி இசைப்போரின் குறையேயாம். தனிச்சங்கீதம், அல்லது, சங்கீதத்தில் ஆலாபனை, பல்லவி முதலிய பத்ததிகள் உயர்தர இன்பத்தையும் மேன்மையான உணர்ச்சிகளையும் எழுப்பத்தக்கதாம். உயர்தர ஞானமுடையோர் அவ்வித சங்கீதத்தையே விரும்புவார்கள்.

இந்தியாவில் கைத்தொழில் விஷயமாய் ஜனங்கள் கொண்டிருக்கிற பொய்யபிமானங்களை இக்கலைகள் விஷயத்திலும் காட்டுகிறார்கள். இக்கலைகள் பயிலுவது சிலகூட்டத்தாருக்கே, அல்லது, சிலஜாதியாருக்கே, உரித்தாகுமென்றும், மற்றவர்கள் அவைகளைக்கற்றலும் கையாடலும் கண்ணியக் குறைவென்றும் நினைக்கப்படுகிறது. இது பெரும் பிசகு. எத்தொழிலும் உண்மையோடு தொடரப்படுமாயின், அது ஒருவருக்கும் குறைசெய்யாது. சர்க்கார் உத்தியோகத்திற்குக் கண்ணியம் அதிகமென்றும், கைத்தொழில்கள், நுண்கலைகள் பயிலுதலும் கையாடுதலும் கண்ணியத்திற்குக் குறைவென்றும் நினைப்பது அறியாமையே. மேற்கத்தியவருக்கு இக்கண்ணிய வித்தியாசங்கள் இவ்விஷயங்களில் ஏற்படவில்லை. அதனாலேதான் அவர் எல்லாக்கலைகளிலும் வல்லவராகி, அவ்வக்கலைகளில் புத்தி கூர்மையுடையோர் உழைத்துவர, அக்கலைகள் நாளுக்குநாள் தழைத்து அபரிமிதமான உயர்ச்சியும் மேன்மையும்

அடைந்து வருகின்றன. இன்ன கூட்டத்தார், அல்லது, இன்ன ஜாதியார்தான் இக்கலைகளில் பயின்று கையாடக்கூடுமென்று நாம் நியாய விரோதமாக வரையறுப்பதனாலே, மற்றக்கூட்டத்தார், அல்லது ஜாதியாரில் இயற்கையிற் புத்திக்கூர்மையுடையோர் அவைகளில் இறங்கிப் புத்தியைச் செலுத்தமாட்டாதவராய், அக்கலைகள் விர்த்திக்கு வராமல், வளர்ச்சி நிலைத்த மரங்கள்போல், குன்றிவிட்டன. நமது பொய்யபிமானமெல்லாம் விட்டு, ஜாதி வித்தியாசம், பிறப்புயர்வு, முதலியன பாராட்டாமல் எவ்வெவரும் அக்கலைகளை ஆதரிக்கத்தொடங்குங்காலம் எக்காலமோ, அக்காலத்திற்றான், அவைகள் முன்னுக்கு வந்து அவைகளில் உலகத்தில் மற்றஜாதியாருடன் தமிழராகிய நாம்சமம்நிற்கலாகும்.

ஆகையால், நுண்கலைகளுடைய உண்மைப்பயனுவன? உயர்தனிச்சுகமும், புத்தியையும் உணர்ச்சியையும் நுட்பப்படுத்தலும், நெஞ்சத்தை மேன்மைப்படுத்தலுமாம். உண்மையை உற்றுணர்ந்தும், அவைகளைப் பற்றிய பிசகான கோட்பாடுகளை நீக்கி, இப்போதைதப்போல சிறுபான்மையோரன்றி, ஆண்டிமுதல் அரசன்வரை எந்நிலையுற்றோரும், அவைகளிற் பயிலலாமென்றும், அப்படிப்பயிலுவதால் உண்மையாகக் கண்ணியக்குறைவொன்றுமில்லையென்றும், ஆர, அமரச்சிந்தித்தறிந்தும், நுண்கலைகள் விஷயத்தில் தமிழர்கள் முன்னிலும் அதிகக்கருத்துவைத்து அவைகளைத் தகுந்தபடி ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவருவார்களென்று மன்றாடிக்கொள்ளுகிறேன். அவைகளை அப்படிமுன்னுக்குக் கொண்டுவருதல், கல்வி, வியாபாரம், கிருஷி முதலியவைகளில் உயர்ச்சியுற்று வருதல்போலவே, தமிழர்களுடைய இன்பத்திற்கும். அவர்களுடைய பீடும், பெருமையும் உலகமெங்கும் நீடூழிகாலம் பிறங்கச்செய்வதற்கும் ஒரு முக்கிய கருவியாகுமென்பது உறுதியே. இக்கலைகளில் ஆங்கிலேயர் முதலிய மேற்கத்திய ஜாதியார் அடைந்திருக்கும் அபாரமான சீர்திருத்தம் நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டி, அல்லது, காட்சிப்பாடமாக நிற்றலும் அறியத்தக்கதே.

தி. லக்ஷ்மணபிள்ளை. B. A.

(முற்றும்.)

——(:o:)——

இயற்கைத் தத்துவ போதம்.

முன்னுரை.

——[::0::]——

இவ்விஷயத்தைப் பற்றி எழுதுவதற்கு என்னினும் மிகத்தகுதியுடையோர் தமிழ்நாட்டில் பலருண்டு. எனினும் எனது நண்பராகிய தமிழன் பத்திராதிபரவர்களின் வேண்டுகோளுக் கிணங்காதிருக்க எனக்குமுடியாததுபற்றியும், என்னாலியன்றவரைத் தமிழர்களுக்கு இயற்கைசாஸ்திரங்களில் விருப்பூட்ட வேண்டியது என் கடமையானது பற்றியும் இவ்விஷயத்தைப் பற்றி எழுத முற்படுகின்றேன்.

இவ்வுலகத்தில் இயற்கையாகக் காணப்படுகிற கல், மண், கொடி, செடி, மரம், பறவை, மிருகம் முதலிய உயிருள்ளனவும், உயிரில்லாதனவும் ஆகிய எல்லாப் பொருள்களையும் பற்றிய விஷயங்களைக் கற்றுணர்தலே “ இயற்கைத்தத்து போதம் ” எனப்படும்.

நமது பூர்வீகர் சற்றேறக்குறை 3000, வருஷங்களுக்கு முன்னமேயே இயற்கைப் பொருள்களைக் கவனித்து, அவற்றைக் கணக்கிட்டு வகுத்து, ஒவ்வொரு வகுப்பைப் பற்றியும் சிலமுக்கிய குணங்களை அறிந்திருந்தனர் என்பது தொல்காப்பியம் முதலிய பண்டைக்காலத்து இலக்கியங்களால் தெரியவரும். ஆயினும் பற்பல காரணங்களால் இந்த சாஸ்திரப்பயிற்சி நிலை பெறாமல், சீர்அழிந்ததுமன்றி அத்தகைய சாஸ்திரங்கள் பூர்வகாலத்தில் இருந்தனவோ இல்லையோஎன்பதுங்கூடசந்தேக விஷயமாய்விட்டது. இந்த உண்மையை அறியாத மேல் தேசத்தவரிற் சிலர் தமிழருக்கு மட்டுமன்றி இந்தியர்களுக்குங்கூட இயற்கைத் தத்துவங்களை ஆராய்ந்தறியும் உணர்ச்சியே முற்றிலும் இல்லையென்று சாதிக்கின்றனர். அத்தகையோர்க்கு ஒரு படிப்பினை கற்றுக் கொடுப்பது போல, மேல்நாட்டு சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த சில இந்தியர்கள் மேல்நாட்டாருக்கும் இதுவரைத் தெரியாதிருந்த அரியபெரிய சாஸ்திரவிஷயங்களை நூதனமாக விளக்கிக் காட்டியிருக் கிறார்கள். இதையறிந்த மேல்நாட்டார் இந்து தேசத்திலும் இவ்வளவு புத்திகூர்மையுள்ள வர்கள் இருக்கிறார்களா என்று பிரமிக்கிறார்கள். இவ்வாறாக நமது நாட்டிற்குப் பெருமை உண்டாக்கும் சாஸ்திரிகள் (Scientists) சிலர் ஆங்காங்கு இருந்த போதிலும், நமது நாட்டின் விரிவையும் ஜனத்தொகையையும் கவனிக்கும் போது ஆயிரக்கணக்கான சாஸ்திரிகள் இருந்தாலும் போதியதாகுமா. நமது நாட்டாரெல்லாம் இயற்கைத் தத்துவ ஆராய்ச்சியில் தமது புத்தியைச்செலுத்தும் நாள் எந்நாளோ அந்நாளே நமது தேசம் நன்னிலைமையை அடையும். அஞ்ஞானம் நீங்கவும், ஆரோக்கியம் பெருகவும், செல்வம் வளரவும் மற்றும் எல்லாப் பாக்கியங்களும் சேங்

கவும் இயற்கைத்தத்துவ போதமே முதற்காரணம். மேல்நாட்டார் சகல விதத்திலும் நாகரிகமடைந்து செல்வப்பெருக்கும் செல்வாக்கு முடைய வராயினமைக்கும் அவர்களது இயற்கைத்தத்துவ போதமே காரணமாம்.

ஆகையால் மேல்நாட்டு சாஸ்திரமுடிபுகளை எனதுசிற்றறிவுக் கியன்ற வாறு எடுத்துக்காட்டி அச்சாஸ்திரங்களின் அற்புதங்களையும், பயனையும், நன்மைகளையும விளக்குவதே இவ்விஷயத்தின் தலைமையான நோக்கம்.

நம்மைச் சுற்றியிருக்கும் சாமானியப் பொருள்களிலுங்கூட நாம் கற்றுணர வேண்டியதாக அநேகவிஷயங்களுள. நமது சுற்றுப் பொருள்களைப் பற்றிய இயற்கைத்தத்துவ ஆராய்ச்சிக்கு வழிகாட்டும் சிலவிஷயங்களைச் சிறிதுசிறிதாக இப்பத்திரிகை வாயிலாய் எடுத்துக்கூறுவோம்.

இயற்கைத்தத்துவ போதத்தினல். நமது சகல லௌகிக இன்பங்களும் பெருகுவதன்றி இப்பிரபஞ்சமுழுதும் ஆக்கி, ஆண்டு, அழிக்கும் ஆண்டவனுடைய சர்வவல்லமையும், மகத்துவமும், பூரணஞானமும் இனிது விளங்கும்.

தொடரும்.

Devodoss Henry. B. A. L. T.

——(:o:)——

ஓர் உபந்நியாசம்.

——,'—::0::—',——

(இஃது, திருவிதாங் கோட்டுக் காருணிய மகாராஜா அவர்கள் 56-வது திருநாளின் நினைப்பூட்டுக் குறியாக, திருவனந்தபுரத்தில், சேவையினீங்கிய நீதிபதிதிவான் பகதூர் A. கோவிந்தப்பிள்ளையவர்கள் B. A. B. L. அக்கிராசனத் தின்கீழ் ஓர் இராப்பாடசாலை தாபிக்கப்பட்ட பொழுது ஸ்ரீஉருத்திர கோடீசுவரரால் நிகழ்த்தப்பட்ட உபந்நியாசத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

மனிதர்கள் யாவரும் அடைதற் பாலன கல்விப் பொருள் செல்வப் பொருள் என இரண்டாகும், அவற்றுள், கல்வி யென்பது மனிதர்களின் அறியாமையைப் போக்கி அவர் தம் அறிவை விருத்தி செய்தற்குரிய முக்கிய கருவியாகும். கல்வி யென்னுங் கருவியினாலன்றி மற்றொன்றினாலும் மனிதர் அறிவு விருத்தியாகமாட்டாது. கல்வியே மனிதர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்துணர்த்தும் சூரியனும்; கல்வியே மனிதர் களுக்கு நாக

சிகத்தை புண்டாக்கி விளங்கும் சந்திரனும்; கல்வியே மனிதர்களுக்குச் செல்வத்தையும் இன்பத்தையுந் தரும் மேகமாம்; கல்வியே மனிதர்கள்மனத் துன்பம் அடைந்து தளருங்காலத்து அவர்களுக்குக் கைகொடுக்குந் துணைவனும். இப்பெற்றித் தாகிய கல்வியை அடைந்தோரே மிக்க அறிவுடையவராவர். மக்களாய்ப் பிறந்தவர்களுக்குக் கல்வியறிவு இல்லையாயின் அவர்கள் மிருகத்தோடு ஒப்பாவார். இது.

" விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்
கற்றா ரோ டேனையவர். " என்று

ஒல்காப் பெரும் புகழ்த் திருவள்ளுவனர் தம் அரும் பெருந்திருக் குறள் நூலின்கண் கூறினமையாலும் அறிக. ஆசிரியர் திருவள்ளுவனர் தம் திருக் குறள் நூலில், கல்வி, கல்லாமை என்பவைகளைப்பற்றி எவ்வளவோ கூறுவாராயினர்.

திருக்குறள்என்னும் தமிழ்நூல் ஆங்கிலமுதலிய பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகமெங்கும் கற்கப்படுகின்றது. அந்நூலில்உள்ள பொற்புறு பற்பல வற்புதப் பொருள்களை மலையாள நன்மக்களும் அறிந்து கடைத் தேறும்பொருட்டு அந்நூலைநம்முடைய அக்கிராசனாதிபதியார் அவர்கள் தம் மலையாளபாஷையில் மொழிபெயர்த் திடுவாராயினர். இப்பெரியோர் செய்த இவ்வரிய பெரிய காரியத்திற்குத் தமிழ் உலகம் இவரிடத்து என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. நிற்க,

கல்வியானது மக்களுக்குப்பல்லாற்றானும் பயன் தருதலினன்றே, எம் பெருந்தகையாளரான திருவள்ளுவனர், அது எல்லாருக்கும் இன்றியமையாததென்று வற்புறுத்திக் கூறுவா ராயினதூஉ மென்க.

இதை இக்காலத்து உலகமெங்கும் உள்ளபேரறிவாளரும், நன்கு உணர்ந்துதான் எல்லாச்சாதியாரும், எல்லாக்குலத்தாரும், எல்லாவகுப்பாரும் கல்வியைப் பெறவேண்டுமென்று பெருமுயற்சிசெய்து வருகின்றனர்.

இந்தியாவிலும், அறிவுடையவர்களும், அரசாங்கத்தாரும் யாவர்க்கும் அவரவர் நிலைமைக்குத்தக்கபடி கல்வியைப்புகட்டவேண்டுமென்றுபெரிதும் முயல்கின்றனர்.

இம்முயற்சியை யொட்டியே, இச்சர்வசாதிசமய சமாச சங்கத்தாரும் காலைமுதல் மாலைவரையில் பல்பல தொழில்கள்புரிந்து ஒருசிறிது பொருளீட்டிவாழும் பிள்ளைகளுக்கும், உண்மையில், ஏழைகளாகவுள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கும் இரவில் கல்விகற்பித்து அவர்தம் அறிவை விரிதரச்செய்ய

குன்றுக்குழியின்கண் தம் சங்கமண்டபத்தில் ஓர்கல்விச்சாலை தாபித்து, நடத்திவருகின்றனர்.

இப்பக்கங்களில் உள்ள தொழிலாளரும், ஏழைகளும் கல்விபயின்று அதன்பயனை அடைய, இந்தவிடத்தில் ஒருகல்லூரியினைபெறுவிக்கவே இவர்கள்இப்போது முன்வந்துளார்.

இச்சங்கத்தார்செய்யும் இப்பரோபகாரச் செய்கைகள்யாவராலும், சாலவும்நன்குமதிக்கற்பாலனவாம்.

தம்மை உயர்ந்தசாதியோர் என்று சொல்பவர்களால், கீழ்நிலையிலேயே அமிழ்த்தப்பட்டுள்ள வகுப்பாருள் ஒருவகுப்பினராகிய புலையர்தம் பாலர்க்கும் இச்சங்கத்தார் கல்விகற்பிப்பான் வேண்டி அவர்களையும் தம் இரவுப்பாடசாலையில் சேர்த்தகாலையில், அந்தோ! அதுகண்டு மற்றைச்சாதிப்பிள்ளைகள் சாதிவேற்றுமையுணர்ச்சியினால் பாடசாலைக்கு வருதலைவிடத்தலைப்பட்டனராம். அறிவான்மிக்கீர்! ஈதென்னபாருங்கள்! ஆ! இச்சாதிவேறுபாடு என்று ஒழியுமோ? அறிவிற்சிறந்த கனவான்காள்! வாய்திறந்துகூறுமின்! இவ்வாறானசாதிவேறுபாட்டினால், எழும் இடைஞ்சல்களை உணர்ந்தேபோலும் நந்தம் அக்கிராசனாதிபதியார் புலைக்குடிச்சிறுவர்களுக்குத் தனியே பள்ளிக்கூடம் தாபித்தனர்!

புலைக்குடிச்சிறுவர் நன்மையின் பொருட்டு உழைத்துவரும் நம்முடைய சபாநாயகர் திவான்பகுதூர் கோவிந்தப்பிள்ளை அவர்களுடைய பெருங்குணம் பெரிதும் வியக்கற்பாலதே!

இப்பரோபகார சீலரால் தாபிக்கப்பட்டுள்ள புலைப்பிள்ளைகள் பாடசாலையைபார்க்க நான் ஒருநாள்முயன்றும், அவ்வாறுபார்த்தற்குக் கூடாமற்போயிற்று. அது பற்றி யான்மிகவும் மனமுளைகின்றேன். யான்விரைவில் அதனையும் பார்க்கப்பெறுவேனாக.

இங்கு இதுபோது தாபிக்கப்படும் இரவுக்கல்விச்சாலையில், தொழில், செய்யும் பிள்ளைகளுக்கும், எளியபிள்ளைகளுக்கும் தமிழ், மலையாளம் இங்கிலீஷ் என்னும் மூன்றுபாஷைகளுடைய இலக்கியவிலக்கணங்களிலும், மற்றுக்கணக்குவகைகளிலும் சிறிதுஞானத்தைவிளைத்தலோடு, அவர்களுக்கு நுண்கலைகள், கைத்தொழில்கள், வியாபாரமுறை இவைகளைக்குறித்தும் சிறிது போதித்தால் நலமாகவிருக்குமென்று எனக்குத்தோன்றுகின்றது. இவற்றோடு அவர்களுக்கு நற்குணநல்லொழுக்கங்களையும், பரிசுத்தவழிகளையும், இந்நாட்டின் காருணிய மகாராஜாவினது சட்டதிட்டங்களையும் உணர்த்தவேண்டியது அத்தியாவசியமாகும்.

தமிழன்.

யான் நேற்று இச்சங்கத்தின் சென்ற வருஷ அறிக்கைப்பத்திரிகையை வரவணழத்து வாசித்துபார்த்ததினால், பிள்ளைகளுக்குச்சன்மார்க்கமும், பரிசுத்தவழியுங் கற்றுக் கொடுக்கவேண்டு மென்பது, இச்சங்கத்தார் கருத்தாகவுமுள்ளதை அறிந்து மிகவுஞ் சந்தோஷிக்கலானேன், ஆனால், இக்கருத்து, இனிச்சிறிதுசிறிதாக, நிறைவேறு மாறுமுயலல் வேண்டியதுதான்சங்கத்தார் கடமையாகும்.

யான், மேற்கூறிய மிக அவசியமானவிஷயங்கள் பிள்ளைகளுக்கு உணர்த்தப்படுமானால், அவர்கள் தம் வாழ்நாளில்ஒழுங்காகவும், அமைதியாகவும், சுகமாகவும் இருப்பார்களென்று நம்புகின்றேன்.

இவ்வரிய பெரிய காரியங்களெல்லாஞ் செவ்வனேநடைபெறுதற்கு இச்சங்க அங்கிகள் ஒவ்வொருவரும் தத்தம்மால் இயன்றவளவு உழைக்கத் தொடங்கல் வேண்டும்.

இஃதேயுமன்றி, ஆங்கிலக் கல்விச்சாலைகளில் உயர்வகுப்புகளில் வாசிக்கும் மாணவர்கள் தமக்கு அவகாசமுள்ளபோதெல்லாம் இச்சங்கத்தின் நற்காரியங்களில் ஊக்கத்துடன் சகாயஞ்செய்தலும் வேண்டும்.

சாலைவாசிகளே! உங்களிடத்தில் தாபிக்கப்படும் இக்கல்விச்சாலையின் அரும் பெரும் நோக்கத்தைப்பாரீர்! இத்தன்மைத்தான இரவுக்கல்விச்சாலை உங்கள்பக்கத்தில் இருப்பது உங்களுக்கு மேன்மையாகும.

ஐயன்மீர்! இக்கல்விச்சாலை இனிது நடைபெறுமாறு நீவீர்களெல்லாம் சர்வசாதிசமய சமரச சங்கத்தார்களைக் காருணியத்துடன் பெரிதும் ஊக்கி உங்களால் கூடியவளவிற்குப் பொருளுதவி புரிவீர்களாக. இதனைமறவன்மின்!

தமிழும், மலையாளமும், ஆங்கிலமும்பயின்ற செல்வர்களே! நீவீர்களெல்லாம் தொழிலாளிகளுக்கும், ஏழைகளுக்குங் கல்வியறிவைப்புகட்டுதற்குப் பல்லாற்றாலும் முயலுங்கள்!

கல்வியென்னும் வித்தையானது ஞானத்தையும், அன்னவஸ்திரமுதலியவற்றையும் கொடுத்தலின், எல்லாத்தானங்களிலும் வித்தியாதானமே சாலச்சிறந்ததாகும்; இவ்வித்தியாதானத்திற்குச் சமமாகவுள்ள தருமம் ஒன்றுமில்லை. இத்தகையதருமதான் சீவகாருணியச்செய்கையாகும்; இத்தன்மைத்தான சீவகாருணியச்செயலைப் புரியத்தோன்றிய திருவனந்தைச்சர்வசாதிமத சமரச சங்கம் நீடூழிவாழ்க.

உருத்திரகோடீசுவரன்.

———:———

புராண தீர்த்தம்.

—:|:—

சில பாமர ஜனங்கள், அசத்தியம் களவு, சூது, வஞ்சகம், கொலை, விய பிசாரம், துரோகம் இவைகளை மனதறியச் செய்துவிட்டு, நதி, குளம், சமுத்திரம் இவைகளில் தீர்த்தமாடி பாவங்களைப் போக்கி மோக்ஷ சாம்பிராச்சியத்தை அடையலாமென்று நம்பியிருக்கிறார்கள். இந்நம்பிக்கையினால் மேலாவது தங்கள் துற்குணங்களை நீக்கி சற்குணங்களை நாளுக்குநாள் அபிவிர்த்தி பண்ணி உத்தமபுருஷர்களாக வேண்டுமென்கிற எண்ணமும் இல்லாமல் போய் விடுகிறது.

பூரணமாயான்மாவுக் கபின்னமாக்
பொருந்துபரப் பிரமமென்னுந் தீர்த்தத்தின்கண்
சாரதமா யெப்போதுந் தானமாடல்
சகலத்தின் மேலான தானமாதுந்
தீரமிகும் புத்திரனேயிதனையன்றி
தீர்த்த மெதிலாடலுமே தானமன்று,
பேரறிவாம் பரப்பிரம தீர்த்தத்தின்கண்
பேதமறநானென்று மாடுகின்றேன். ரிபுகீதை அத்—6—கவி—2

எனக்குரு சிஷனுக்கு உபதேசிக்குமிடத்து, புத்திரா! பரப்பிரம மென்னுந்தீர்த்தத்தில் மனதைத் தோய்த்தலே சகலதீர்த்தமாடலிலு மேலான தீர்த்தமாடல், வேறெவ்விதமான தீர்த்தங்களிலும் தீர்த்தமாடுதல் ஸ்நானமாகாது என்று சொல்லப்பட்டிருப்பதினு லறிக. தவிரவும்

நிகழுமகம் பிரமாஸ்மி யென்றுரைத்த
நிச்சயமே மேலான தானமைந்தா
பகருமிதன் சொரூபத்தை விசாலமாகப்
பரமசிவ னருளியவா பகரக்கேளா
யக மனிசப் பரப்பிரம சொரூபமானே
னகஞ் சச்சிதானந்த சொரூபமானே
னகமனிசம் பரமசிவ சொரூபனென்னு
மகம்பிரம நிச்சயமே மகத்தாந்தானம் ரிபுகீதை அத்6—கவி3

நான் பிரமவஸ்துவு மாயிருக்கிறேன் என்றதிடமான நிச்சயமே மகத்தான ஸ்நானம். மனதினிடத்தில் பிரமத்தை தியானிக்கிறவன் பிரமசொரூபமாகின்றான். என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுநிற்க நாம் பிரமம் நாம் ஆத்மா, நாம் கடவுள் என்றதினால் அர்த்தமென்ன? மேற்சொன்ன

வைகளின் லக்ஷணங்கள் நம்மிடத்தில் அமைந்திருக்கவேண்டும். நாம் கடவுளின் அம்சம் என்றால் கடவுளின் அருமையான குணங்கள் நம்மிடத்திலிருக்க வேண்டும். தமோகுணசொருபமான கோபம் அகங்காரம் குரோதம், பொறாமை வஞ்சகம் களவு அசத்தியம் இவைகளை நடபடியில்வைத்துக் கொண்டு,நாம்கடவுள்; நாம்பிரமம், என்று தியானிப்பதில் பிரயோஜனமில்லை. நாம்கடவுளானால் கடவுளின் குணம நம்மில் காணவேண்டும். கடவுளுக்கு அகங்காரங்கிடையாது. நமக்குக்குரோத மிருக்கக் கூடாது. கடவுளுக்குப் பொறாமைகிடையாது.நமக்கும் பொறாமையிருக்கக்கூடாது. கடவுளுக்கு கௌரவங்கிடையாது. நமக்குங் கௌரவமிருக்கக்கூடாது. நாம் கடவுளின் அம்சம். கடவுள் என்ற நிலைமைக்குவராமல் ஒரு பக்தனுடைய நிலைமையிலிருப் போமானாலும், கடவுளுடைய அருமையான சற்குணங்களைப் பின்பற்றி, துற்குணங்களை நீக்கியிருப்பதே உண்மையான பக்தனுடைய அடையாளம்.

இஃதல்லாமல் வெறும், பால்பாயசம் நெய்ப்பாயசம பழம், மாலை, பூ, சந்தனம் பன்னீர் முதலிய வழிபாடுகளினால் நாம் பக்தனாகமாட்டோம். நம்முடைய துற்குணங்களைநீக்கி சற்குணங்களை சம்பாதித்து பரோபகாரமாக மற்றவர்களுக்கு ஈஸ்வரனைநினைத்து நம்மைஉபயோகப் படுத்துவோமானால் இதுவே மேலான ஈஸ்வரபக்தி. நம்முடையகொடைகளினால் கடவுள்திருப்தியடையமாட்டார். ஏனென்றால் அவருக்கு சகலபாக்கியங்களுமிருக்கின்றன. அவர் நமக்கு கொடுக்கிற ஸ்திதியிலிருக்கிறாரேதவிர நாம் அவருக்குக் கொடுக்கிறஸ்திதியிலில்லை. அவர்தரித்திரருமல்ல. அவ்விதமான கணக்கற்றபணஞ்செலவுசெய்து வழிபாடுகள் நடத்துவதைவிட நம்மைவிடத் தாழ்ந்தோருக்காக் கடவுளை நினைத்து வழிபாடுகள்நடத்துவோமானால் அதுகடவுளுக்கு பரமப்பிரீதியாக விருக்கும்.

நமமைவிடத்தாழ்ந்தோரிடத்து அவர்களுடைய ஞானவிஷயமாகவும், பக்திவிஷயமாகவும்,அவர்களுடைய ஆகாரவிஷயமாகவும், அவர்களுக்கு எதெல்லாம் குறைவுபட்டிருக்கிறதோஅவ்விஷயமாகவுமெல்லாம்அவர்களை மேல்நிலைமைக்குக் கொண்டுவரஇரக்கமுற்று சிரமிப் போமாயின் அதுவே கடவுளுக்குப் பரமப்பிரீதி. அதுவே மேலான ஈஸ்வரபக்தி. ஏனென்றால் கடவுள் கருணாசாகரர். அவருக்கு யாவரிடத்தும் கருணையுண்டு. ஆகையினால் உதவியற்றதாழ்ந்தோரிடத்து அவருக்குக்கருணையில்லாமற்போவதற்கிடமுண்டா? இல்லை. அவ்விதம் கடவுள்ழ்கருணைகொள்ளும் படியான தாழ்ந்தோரிடத்து நாமும் இயன்ற அளவு கருணைவைப்போமானால் கடவுள் நம்மைப் பிரியப்படுவார் என்று சொல்லவும் வேண்டுமா? இதல்லவோ ஈஸ்வரபக்திஇவ்விதநடக்கைகளினாலல்லவோநம்முடைய பாவந்தொலையவேண்டும். வெறும் ஜலஸ்நானத்தால் நாம் செய்தபாவல் நீங்குவதெப்படி. நாம் தீர்த்தமாடிவருகிற தீர்த்தத்தில் ஏராளமான ஜீவஜெந்துக்கள் கிடக்கின்றன. அவைகளெல்லாம் அத்தீர்த்தங்களை ஸ்பரிசித்தமாத்திரத்தில் புண்ணி

ய சரீரங்களை எடுக்கவேண்டாமா? அவ்விதங்காணவில்லையே. ஆகையினால் தீர்த்தமாடலென்பது கடவுளாகிய சமுத்திரத்தினிடத்தில் நம் மனதைத் தோய்த்தலே யாம்.

இவ்விதஞ் சொன்னதினால் புராணாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது பொய்என்றல்ல அர்த்தம். அது, கடவுள் ஒருவரிருக்கிறார்,புண்ணிய பாவங்களுண்டு, துன்பம்செய்தால் துன்பமநேரிடும், நன்மை செய்தால் நன்மை கிடைக்கும் என்றபகுத்தறிவில்லாமல், சாப்பாடு உறக்கம்என்ற இந்தஇரண்டுஎண்ணத்தைத்தவிர வேறெண்ணமில்லாமலும், சுயமாகஒருவேலை செய்யத்திராணியில்லாமல் மற்றொருவர் நீஅதைச்செய் யென்றால் செய்யவும் ஓன்றால் ஓடவும்மாத்திரம் அறிவுள்ள மஹா மூடாத்மாவுக்கு, ஐயோஇன்வகெட்டுப்போய்விடுவானே கடவுளைநினைத்துஜலத்தில் ஸ்நானஞ்செய்தாவ பாவம் போய்விடும்என்ற எண்ணமாவது வரட்டும்.அதனால் கடவுள்ஒருவரிருக்கிறார் என்ற போதமாவது உண்டாகட்டும். தேகசுத்தியாவது வரடடும். எதாவது பிரவர்த்தி யில்லாமல் வெறுஞ் சுவர்போல் மூடனாயிருப்பதைவிடநற்பிரவர்த்தியுண்டாகும் என்றுசொன்னதே தவிர வேறல்ல. இந்த மூடாத்மாவைத்தான் சூத்திரனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையினால் ஈஸ்வரனொருவருண்டு, புண்ணிய பாவங்களுண்டு,என்ற போதமுடையவர்கள் வெறும்புராணங்களை மாத்திரம் கதைரசத்தினால் மேற்பார்வையாக வாசித்துக்கொண்டுஅக்கதைகளைப்பரமார்த்திக திசையிலிருந்து பேசுகிறவர்களிடம் பிரமாணமாக எடுத்துச்சொல்லிதர்க்கம்பண்ணிவீண்போது கழிக்காமல் மேலான அந்நியமதநூல்களையும் நம்நூல்களையும் வாசித்து அதன்அந்தரார்த்தங்களை யறிந்து அந்நூல்களைஒற்றுமைப்படுத்திப்பார்த்து உண்மையுள்ள வைகளைஎடுத்து முதல்முதலாக சற்பிரவர்த்திகளில் நான்எனது என்ற அகங்காரமில்லாமல்: மனதை லயப்படுத்திகர்மயோகியாகியும்: இரண்டாவதாகநான்எனது என்றஅகங்காரமில்லாமல் மனதைக் கடவுளிடத்து செலுத்தி பக்தியோகியாகியும், மூன்றாவதாக நான் எனதென்ற அகங்காரமிலலாமல் மனதை தன்னிடத்திலிருக்கிற ஆத்மாவிடத்திலும் செலுத்தி யோகபழக்கத்தைப் பெற்றும் நான்காவதாகமனதைநான் என்ற அகங்காரமில்லாமல் தானே தானாகஎங்கும் விளங்கி ஞானயோகியாகியும் இவ்விதம்படிப்படியாய் இருந்த கதியிலே யிராமல் அபிவிர்த்தியடைந்து முக்தராகி பந்தவிடுதலையடையக் கடமைப்பட்டிருக் கிறார்கள்.

D. அகஸ்தியலிங்கம்பிள்ளை, F. T. S.

———:———

எலும்பின் உபயோகம்.

——(:o:)——

மேனாட்டார் அற்பப் பொருளையும் பயனுடையதாக்குவர். நாமோ விலையுயர்ந்த பொருளையும் பயனற்றதாக்குவோம். அவர்கள் நம்மைவிட கல்வியிலும் நாகரீகத்திலும் செல்வத்திலும் மற்றும் எவ்வகையிலும் மிகுந்திருக்க ஏற்பட்ட காரணங்களுள் இதுவும் ஒன்றே.

நம் நாட்டுப் பிரபுக்கள் தங்கள் கையிலுள்ள பணங்களைப் பூமிக்குள் புதைத்துப் பார்த்துப் பார்த்து ஏங்கவோ, ஒழுக்கறைப் பெட்டிக்குள் சேமித்து நோக்கி நோக்கி மகிழவோ, பாழ்நிலங்களை வாங்கிப்பண்படுத்தும் வகையறியாது நூற்றுக்கு இரண்டு வட்டியாவது பெறாமல் வருந்தவோ செய்கிறார்கள்.

மேனாட்டுப் பிரபுக்களோ பற்பலவித கைத்தொழில்களில் தம் கைப் பணத்தை முடக்கிப் பதினாயிரக்கணக்காக இலாபம் அடைகிறார்கள். நம் நாட்டிலுண்டாகும் பருத்திகளைச் சேகரித்து நூலாக்குவதும், கருப்புக் கட்டிகளைச் சேகரித்து ஜீனியாக்குவதும், மலைப் பிரதேசங்களில் காப்பி, தேயிலை, ரப்பர் முதலியன பயிரிடுவதும் நாமா ஐரோப்பியர்களா? நமது நாட்டில் இயல்பாகவே எல்லாப் பாக்கியமும் நிறைந்திருந்தும் அவைகளை அநுபவிக்க மதியற்றவர்களாய், வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க் கழும் புத்திசாலிகளாக இருக்கின்றோம்.

உழைப்பும் ஊக்கமும் யுக்தியுமுடையார்க்கு நமது நாட்டினும் செல்வம் பொருந்திய நாடு வேறொன்றுமில்லை.

நமது நாட்டில் நாள்தோறும் எத்தனையோ கால்நடைகள் மரணமடைகின்றன. கால்நடைகளுக்கு நோய் கண்டவுடன்தானே பறையரையாவது, சக்கிலியரையாவது தேடத் தொடங்குகிறோம். கால்நடை கண் மூடினால் உடன்தானே அவர்களிடம் ஒப்புவித்து விட்டு "ஆ! சனி தொலைந்தது" என்று சமாதானமடைந்து விடுகிறோம். அவர்களோ தோலையும், சிலவேளை மாமிசத்தையும் எடுத்துக் கொண்டு எலும்புகளைப் பயனற்றதெனத் தள்ளிவிடுகிறார்கள்.

இவ்வாறாகத் தள்ளப்படும் எலும்பானது எவ்வளவு பிரயோஜனமானது என்று யாராவது அறிந்ததுண்டா? அல்லது அறியத் துணிவதுண்டா? அல்லது யாரேனும் சொன்னாலும் செவி கொடுப்பதுண்டா? இல்லை! இல்லை!!

நமது துரைத் தனத்தார் கிருஷி டிப்பார்ட்டுமென்றை யேற்படுத்திச் சுமார் 6 வருஷங்களுக்கு மேலாயின. நாட்டாரின் நன்மையிலேயே எப்

பொழுதும் கண்ணும் கருத்துமாயிருக்கும் டயாக்ற்றர் ஸ்ரீமான் டாக்கற்ர் குள்ளன் பிள்ளையவர்கள் எலும்பின் பயனைப் பற்றிப் பலமுறை பேசியிருக்கிறார்கள். நம்மவரில் ஒருவராது அதைக் கவனித்ததுண்டா? கரும்பு தின்னவும் கைக்கூலி கேட்கும் குணம் நம்மைவிட்டு எப்பொழுது போகும்? எலும்பின் உபயோகங்களைச் செவ்வையயறிந்து அதைப் பக்குவப் படுத்தத் தொடங்கினால் வருஷா வருஷம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அரைக்கோடி ரூபாய் விலைபெறுமான எலும்பு வீண்போகுமா? வெளிநாட்டார் நம்மிடமிருந்து அரைக்கோடி ரூபாய்க்கு எலும்பு வாங்கவேண்டுமானால் அவர்களுக்கு அதனால் எத்தனைகோடி ரூபாய்க்கு இலாபம் இருக்கவேண்டும்! வெளிநாட்டார் அடையும் இலாபத்தை நாம் தானே அடைய முயன்றால் அது ஒருபொழுதும் பேராசையாகாது, ஆகையால் எலும்பின் பயனைப் பற்றிச் சிறிது சொல்லத் தொடங்குகிறோம்.

நம்மவரில் அநேகர் உபயோகிக்கும் பசையும், சோப்பும் எலும்பிலிருந்து உண்டாக்கப் பட்டவையென்றால் அநேகர் நம்ப மாட்டார்கள். ஆனால் உண்மை அப்படியே. எலும்பைப் பக்குவப்படுத்தும்போது கிடைக்கும் ஒவ்வொரு பொருளும் நமக்கு உபயோகமானதே.

எலும்பைத் தொழிற் சாலைக்குக் கொண்டுபோனவுடன் சுத்திப் படுத்துவதே முதன் முதல் செய்யப்படும் வேலை. எலும்பின்மீது ஒட்டியிருக்கும் உலர்ந்த மாமிசம் முதலியனவற்றை நீரால் கழுவிச் சுத்தப்படுத்தியவுடன் இனம் பிரித்து ஒரு இயந்திரத்தில் போட்டுப் பொடித்து ஒரே கட்டியாக ஆக்குவார்கள். இந்தக் கட்டியைப் பின்னர் கந்தகாமிலம் (Sulphuric acid) கலந்த நீரில் சிறிது தோய்த்து வைப்பார்கள். இவ்வாறு தோய்த்தெடுத்த பின்னர் எலும்புக் கட்டி மிக வெண்மையாயும் சுத்தமாயுமிருக்கும். பின்னர் (Digester) என்னும் இயந்திரத்திலிட்டு நீராவியின் உதவியால் அநேகமணிநேரம் இறுக்குவார்கள். நன்றாய் இறுக்கப்பட்டபின் டைஜஸ்டர் இயந்திரத்தினடியில் உள்ள ஒரு அடைப்பைத்திறந்து அதன் வழியாய் எலும்புக் கட்டியிலிருந்து உற்பத்தியான பசையைத் திரவ ரூபமாக வடித்து எடுப்பார்கள். இந்தத் திராவகத்தை வற்றவைத்து, ஒருபகுதியைக் கட்டிப் பசையாகவும், ஒருபகுதியை பாகாகவும் ஆக்குவார்கள். எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட கொழுப்பை சுத்தப்படுத்தாமல் துணிகள் துவைப்பதற்கு உபயோகமான சோப்புண்டாக்குவார்கள். ஸ்நானாதிகளுக்கு உபயோகமான சோப்புண்டாக்க வேண்டுமானால் அந்தக் கொழுப்பை நன்றாய்ச்சுத்தப் படுத்திப் பலவிதமான கமழ்பொருள்களோடும் எண்ணெய்களோடும் சேர்த்து பக்குவப்படுத்துவார்கள். சோப்புண்டாக்கப்படும் பாத்திரத்திலிருந்து ஆவியாக மேலேவரும் நீராவியைக் குளிரச் செய்து (Glycerine) என்னும் பொருள் உண்டாக்கப்படுகிறது.

கடைசியாக "டைஜஸ்டர்" இயந்திரத்தில் மீதமாகும் கொத்து அல்

லது சவரூகிய எலும்பைப் பொடித்து உரமாக உபயோகப் படுத்துகிறார்கள். முதன் முதல் எலும்பைச் சுத்தப் படுத்துவதற்காக உபயோகிக்கப்படும் நீரையுங் கூடக் காய்ச்சி வடித்து உரமாக்கி விடுகிறார்கள்.

ஆகவே நாம் அற்பமென எண்ணித் தள்ளுகிற எலும்பானது எவ்வளவு உபகாரமானதென்று இதனால் ஒருவாறு விளங்கும்.

இவ்வாறு மஹத்தான உபயோகமுள்ள எலும்பைப் பக்குவப் படுத்துவதற்கு இதுவரையிலும் நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் 2—க்கு மேலில்லை.

திருவிதாங் கோட்டிலும் இது வரையிலும் ஒருவராவது இலாபகரமான இத்தொழிலைப் பற்றிக் கவனிக்கவுமில்லை. தகுந்த கல்வியறிவும் அநுபவமும் பணப்பெருக்கும் செல்வாக்கும் உடைய தேசாபிமானிகள் எவரேனும் இவ்விஷயத்தில் முயற்சி செய்வார்களானால் நமது நாடு நன்மையடையக் கூடுமென்று சந்தேகமறச் சொல்லலாம்.

——;—::0::—;——

கிளி

—:—

பச்சிலை செங்கனிகள்—நிறைந்து
படர்ந்து வளராலின்
உச்சியிற் போயிருந்தால்—எப்படிநான்
உன்னைக் காண்பேன் கிளியே? (1)

பூனைகளிங்குவரா;—வேடர்கைப்
பொறியின் பயமு மில்லை;
யானுனைக் காத்திடுவேன்,—இறங்கிநீ
என் கையில் வாகிளியே! (2)

வட்டமாயுன் கழுத்தில்—ஒருநாளும்
வாடாத ஆரமொன்றை
இட்டவர் யாவரென்றே—எனக்கும்
இயம்புவையோ கிளியே? (3)

காய்கனியும் கதிரும்—கொய்திடக்
கருவியுனக் கேது?

வாய் திறந்தோர் மொழி நீ—என்னோடு
வழங்குவையோ கிளியே? (4)

மரத்திலிருந் திருந்தே—விரல்கள்
வளைந்தன வென்றாலுன்
உரத்த அலகு மிக—வளைந்து தான்
உற்றதுமேன் கிளியே? (5)

தோட்டத் திருந் தெடுத்த—கனியை நீ
துண்டித் தருந்தாமல்
கூட்டிற் கெடுத்தோடும்—குறிப்பெது
கூறுவையோ கிளியே? (6)

ஒருகாலை யூன்றி நின்று—மறுகாலில்
ஓர் கனி வைத்தருந்தும்
அருமையாம் வித்தை தனைக்—கற்றது நீ
யாரிடம் சொல் கிளியே? (7)

பறக்கச் சிறகிருந்தும்—மரமீது
பற்றி நீ யேறுவதேன்?
திறத்தை உலகினுக்கு—மிகவே
தெரிவிக்கவோ கிளியே? (8)

பொந்து புடைகளை நீ—தேடித்தேடிப்
போய்க்குடி வாழ்வ தென்னே?
சந்தமாய்க் கூடு கட்ட—உனக்குச்
சமர்த்திலையோ கிளியே ? (9)

சொன்னதைக் கேட்டடனே—மறவாது
சொல்லுந் திறமிருந்தும்
என்னுடன் பள்ளிக்கு நீ—வராமல்
இருக்கலாமோ கிளியே ? (10)

சின்னஞ் சிறு பள்ளியில்—உனக்கொரு
சிங்காரப் பெஞ்சு மிட்டுத்
தின்னக் கனியளித்துப்—பாலபாடம்
செப்புவேன் வா கிளியே! (11)

உருவிலொருவாறு—மனிதரை
ஒத்திடினும் உனைப் போல்

அருமை உரையாடக்—குரங்கினுக்
காகுமோ சொல் கிளியே? (12)

எங்கும் இரைதேடி—அலைந்தே
இளைத்து வருந்துவதேன்?
இங்கு வருவை யெனில்—எவையும்
இனி தளிப்பேன் கிளியே! (13)

S. தேசிகவிநாயகம்பிள்ளை.

மஹான்கள் திருவாய் மொழிகள்

(48—வது பக்கத் தொடர்ச்சி)

(5) தொழில்

ஆரோக்கியசாலியான ஒரு மனிதனுக்குத் திருப்தி செய்யப்படவேண்டிய தேவைகள் பலவுள. ஆகையால் காலாட்சேபத்தின் பொருட்டு அவனுக்கு ஏதேனும் ஒரு தொழிலைப் பின்பற்ற வேண்டியதாக நேரும். இந்து தேசத்தில் இந்தத் தேவை அநேகமாய் இளமையிலேயே உண்டாகின்றது. ஆகவே உங்கள் காலட்சேபத்துக்குப் போதுமான பொருளை எப்படித் தேடவேண்டும் என்பது முக்கிய விஷயமாக ஏற்படுகின்றது. பிறர் உழைப்பினல் ஜீவனம் பண்ணுவது அவ்வளவு திருப்திகரமாகவும் மதிப்பாகவும் இராதாகையால் இவ்விஷயத்தைப் பற்றி நீங்கள் செவ்வையாய் ஆலோசிக்க வேண்டும். ஏதேனும் ஒரு தொழிலில் ஆலோசியாமல் திடீரென்று தலையிடாதீர்கள். அதைப்பற்றி நீங்களும் நன்கு ஆற அமர்ந்து சிந்தனை செய்வதோடு, தகுதியுள்ள நண்பர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டறியவேண்டும். உங்கள் பிராப்திக் கெட்டாத நோக்கங்களை ஒருபொழுதும் நினையாதீர்கள். பேராசை அநேகமாய் நிராசையாகி மனத்துன்பத்தையும் அதிருப்தியையும் தரும். உங்களுக்கு நல்ல பற்றுள்ள தொழிலைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்குச் செய்து முடிக்கத் தகுதியுள்ள அல்லது தகுதியாகக் கூடிய தொழிலை ஆராய்ந்தறியுங்கள். ஜாக்கிரதையாகத் தொழிலைத் தெரிந்தெடுத்துக் கொண்டபின் அதையே முழுசுப்பிடியுங்கள். அதற்குத் தேவையானவற்றிலெல்லாம் வல்லமையடையுமாறு முழுக்கவனத்தையும் அதிலேயே செலுத்துங்கள். அந்தத் தொழிலில் வெற்றி பெற்றவர்களின் உபதேசத்தையும் உதவியையும் வேண்டிக் கொள்ளுங்கள். அவர்களை முன்மாதிரியாக வைத்துப் பின்பற்றுங்கள்.

அவர்களது நற்குணங்களால் அவர்கள் வெற்றி பெற்றனர் என்று அவர்களை நுட்பமாய்க் கவனித்துப் படித்துக்கொள்ளுங்கள். மேலதிகாரிகளிடத்திலும், கீழ்வேலைக்காரரிடத்திலும் சமமானவர்களிடத்திலும் பிணங்காதீர்கள். யாவரோடும் மனோ ரம்யமாயிருங்கள். உங்கள் தொழிலில் திறமையுடையவராகவும், அதன் நுட்பங்களைக் கண்டறியவும் பழகுங்கள். மேலானவர்களோடு வணக்கமாகவும், மற்றவர்களோடு ஆதரவாகவும் இருங்கள்.

6. Theory and Practise

விதியும் அப்பியாசமும்.

விதிக்கும் அப்பியாசத்துக்குமுள்ள வேற்றுமையை அலட்சியமாய் எண்ணவேண்டாம். நல்ல நூல்களிலிருந்து நீந்துதலின் விதிகளையெல்லாம் படித்த ஒருவனுக்கு தண்ணீரின்மேல் சில நிமிஷங்களுக்காவது மிதக்க முடியாமலிருக்கலாம். நீந்த அப்பியாசமுடைய ஒருவன் இலகுவாகவும் சுகமாகவும் நீந்துவான். எப்படி எழுத வேண்டுமென்று உங்களுக்குத் தெரியும். கைகள் இரண்டும் உங்களுடையனவே எனினும் அப்பியாசத்தினால் வலக்கையும் இடக்கையும் எவ்வளவு பேதமடைகின்றன பாருங்கள். வலக்கையால் இலேசாய் எழுதுகிறீர்கள். இடக்கையால் கொஞ்சமேனும் எழுத முடியவில்லை. இதை ஆலோசித்துப் பார்த்தால் பயிற்சியுடைய வேலைக்காரனை ஏன் உலகம் மதிக்கிறதென்றும் விதிமட்டும் கற்றவனை ஏன் விரும்புகிறதில்லையென்றும் உங்களுக்குத் தெரியும். ஆகையால் விதிகளைக் கற்பதோடு பயிற்சி செய்யவும் முயலுங்கள். இல்லையானால் பயிற்சியுடையோர் விதிமட்டும் கற்றோரை வெல்வார்கள். கலாசாலையிலிருந்து வெளிவரும் மாணவர்கள் அநேகமாய் விதிமட்டும் கற்றவர்களே. ஆதலின் நீங்கள் கற்றவிதிகளை அப்பியாசத்தினால் விருத்தி செய்ய முயல வேண்டும்.

7 மனத் திருப்தி

மேலும் மேலும் விருத்தியடைய முயல்வதோடு, உள்ளதைக் கொண்டு திருப்தியடையவும் பயில வேண்டும். மனத் திருப்தியில்லாமல் ஒருவனுக்கும் சந்தோஷத்தோடிருக்க முடியாது. ஏதேனும் ஒரு சம்பவத்தை நம்பி அப்பொழுது திருப்தியடையலாமென்று எண்ணாதே. ஏனெனில் அந்த சம்பவம் நிகழாதிருப்பினும் இருக்கும். இதைப்பற்றி விரிவாகப் பேச நான் எண்ணவில்லை. இன்ப நுகர்ச்சியை விரும்புந்தருணத்தில் இருக்கும் உங்களை இன்பவுருவாய்க்கு "ஆரோக்கியமும், திராணியும், திருப்தியுமே" காரணம் என்று ஞாபகப் படுத்த மட்டும் நான் அதை சுட்டிக் காட்டுகிறேன். ஜீவிதப் போராட்டக் குழப்பத்தில் இவைகளை மறந்துவிடாதீர்கள். அவை அநேகமாய் யாவராலும் பெறக்கூடியவை.

8 தண்டனை விதிகள்

உங்களுக்குப் புதுமையாகவோ மிகையானதாகவோ தோன்றக் கூடிய ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லத் துணிகிறேன். உண்மையான நன்மை நாட்டமே அவ்வாறு துணிவுகொள்ளக் காரணம். சன்மார்க்க விதிகளை நீங்கள் கற்றிருக்கிறீர்கள். நன்னெறிக்கு விலக்கானவை எவை என்றும் நீங்கள் அறிவீர்கள். தேச சட்டப்படி விலக்கான செய்கைகளையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தேச சட்டபபடி தண்டனைக்குரிய குற்றங்களைத் தான் நான் குறிப்பிடுகிறேன். அவைகளில் பல இயற்கையறிவுக்கு எப்பொழுதும் புலப்படக் கூடாதனவாயுமிருக்கலாம். சில நிரூமிதமாகவும் அலௌகிக மாகவும் இருக்கலாம். அறியாமையாலாவது தவறாகவாவது அத்தகைய குற்றங்களுக்கு உள்ளாகாமலிருப்பதற்காக சிட்சா நியமத்தையும் Penal Code அதன் வியாக்கியானங்களையும் வாலிபர் வாசித்தறிய வேண்டியது இன்றியமையாததே யாம். உதாரணமாக அவதூறு நிபந்தனைகளை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். தேசசட்டம் அறியாமையைக் காரணமாக்கிக் குற்றங்களிலிருந்து தப்ப முடியாதென்ற விஷயமும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

9 நல்லொழுக்கம்

ஜீவித வெற்றிக்கு நல்லொழுக்கமும் முக்கிய காரணமா:. ஜீவிதப் பிரயாணத்தில் உண்டாகக் கூடிய அநேக கஷ்டங்களை நல்லொழுக்கத்துக்கு நீக்கமுடியும். தீயொழுக்கத்தினால் ஜீவிதத்தில் தோல்வியடைந்த சில நிபுணர்களை நானறிவேன். என்றாலும் சிறிது பயிற்சியாலும், ஊன்றிப் பார்வையாலும் நல்லொழுக்கமடையயாருக்கும் முடியும். இயந்திரங்களுக்கு எண்ணெய் எப்படி உபகாரப்படுகின்றதோ அப்படியே ஜீவிதத்துக்குநல்லொழுக்கம் உபகாரப்படுகிறது. உங்களைச் சூழ்ந்திருக்கிற ஜனங்களோடுள்ள உங்களது ஊடாட்டத்தை இன்பகரமாக்கும் ரம்ய குணங்களையும் நயபாவனையையும் அகந்தையோடு தள்ளுவதற்கு உங்களது ஆங்கிலப் பயிற்சி ஒரு காரணமாகாதென்று நம்புகிறேன்.

10 பிறர் உணர்ச்சியை மதியுங்கள்

உங்களுடைய ஜீவித காலத்தில் உங்களுக்கு அநேகரோடு ஊடாட வேண்டியதாகவரும். அவர்களும் உங்களைப் போலவே உணர்ச்சியுடைய

வர்களாக இருப்பார்கள். அநாவசியமாக ஒருவருக்கும் மனவருத்தமுண்டாக்கவேண்டாம். எவ்வாறாயினும் உண்மையே பேசவேண்டும். ஆனால் இயன்றமட்டும் அந்நியரைத் துன்பப் படுத்த வேண்டாம். கோபாவேசமான அல்லது பரதூஷணையான வார்த்தைகளை ஒருபொழுதும் பேசவேண்டாம். சுதேசிகளான நாம் இவ்விஷயத்தில் இயல்பாகவே ஜாக்கிரதை யுடையவர்களாகையால் இந்நற்குணத்தை கல்வியாலும் நாம் விருத்திசெய்ய வேண்டும். அந்நியர் உணர்ச்சிகளை எம்மட்டுக்கு மதிக்கிறார்களோ அம்மட்டுக்கு மகான்கள் ஜனசம்மதரா யிருப்பார்கள்.

1 அபிப்பிராய வித்தியாசங்கள்

அறிவின் ஏற்றத் தாழ்வினாலும், ஒன்றின் குணாகுணங்களை நிதானித்தறியுந் தகுதிவித்தியாசத்தினாலும், உரிமை வேறுபாட்டினாலும், கோபத்தினாலும், தப்பெண்ணங்களாலும், நன்மை தீமைகளைப் பற்றிய மதிப்பு வித்தியாசத்தினாலும் அபிப்பிராய வித்தியாசங்கள் உண்டாகின்றன. எவ்வளவுக்கு அபிப்பிராயங்கள் வித்தியாசப்படுகின்றனவோ அவ்வளவுக்கு ஒரு சமுதாயம் பிரிவினையுடையதாகவும் துர்ப்பலமுடையதாகவும் இருக்கும். கல்வி பெருகிவருந்தோறும் பிரிவினைகள் குறைந்து ஒற்றுமையுண்டாக வேண்டுமென்று விரும்பப் படுகிறது, கற்றோரெல்லாம் தங்கள் நடபடிகளைச் சீர்தூக்கி தங்கள் செய்கைகளின் குணாகுணங்களை நிதானித்துப்பின்னரே ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி முடிவான அபிப்பிராயம் சொல்லவேண்டும். ஒரு விஷயத்தைத்தடையின்றி ஒப்புக்கொள்வது அவிவேகக் குறியென்றும், பின்னபிப்பிராயம் கூறுவதே புத்திவன்மைக்கிலக்கணமென்றும் தவறாக எண்ணி வாதஞ்செய்யத் துணிய வேண்டாம். அறிவும் அநுபவமும் உடையோர் ஒப்புக்கொள்ளும் ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசித்து அபிப்பிராய வித்தியாசங் கொள்ளுங்கள். அத்தகைய விஷயங்களை மறுப்பதைப் பார்க்கிலும் ஒப்புக் கொள்ளுவதே நலம். சம்பாஷணைக்கு ஒரு காரணம் உண்டாக்குவதற்காகவும் வாதப்பிரதிவாத நிபுணதையைக் காட்டுவதற்காகவும்மட்டும் ஒரு விஷயத்தை மறுக்காதேயுங்கள்.

———:o:———

விதையெடுத்தலும் விதையடித்தலும்.

—————:—————

ஆண்மிருகங்கள் பொலிய லாயக்கில்லாதுபோய் இனத்தைப் பெருக்காமலிருக்கும்பொருட்டு இச்சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விதையெடுத்தலென்றால் மிருகங்களின் பீஜங்களையே எடுத்துப் போடுவது. ஆதலால் அதிற் கைதேர்ந்தவர்களல்லாதவர்கள் அதைச்செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விரையடித்தல் என்பது விதையையாவது இந்திரியகாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவது எடுத்துப்போடாமல் அழித்துப் பிராணிகளைப் பொலியச் சக்தியில்லாமற் செய்தலாம். விதையடித்தல் (காயடித்தல்) என்னும் கொடியசெய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அதைச் செய்யும் விதத்தைக்குறித்து விரித்துச்சொல்லவேண்டியதிராது. இத்தேசத்திற் கிராமாந்தரங்களில் செய்துவருவது எப்படியென்றால் விதைகூழாய்ப்போகும்வரை அதை அடித்து நசுக்கி இளக்கிவிடுகிறார்கள் என்றே சொல்லலாம். இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிறவரையில் அந்தப்பிராணியானது பொறுக்கமுடியாத வேதனைப் பட்டுக்கொண்டேயிருக்கும். மிருகங்களைவசக்கி மனிதனுக்கு வேண்டிய வேலைகளைச் செய்விக்கவேண்டுமானால் இப்படி யேதாவதொன்றைச் செய்துதான் தீரவேண்டுமென்பதைக்கவனிக்கவேண்டும். சென்ற சிலவருடங்களுக்குமுன் சாஸ்திரப்படி விதையெடுக்கத்தெரிந்தவர்கள் ஏதோ சில பெரியநகரங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக்காலத்தில் விதையடிக்கக் கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்றவிஷயங்களில் பயிற்சியிருப்பதுபோல "விதையெடுப்பதிலும்" தேர்ச்சி உள்ள கால்நடைவைத்தியர் ஒருவரையாவது சர்க்காரில் நியமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் காயடிக்க விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு. விதையடிப்பதைவிட்டு "விதை எடுத்தலினால் உண்டாகும் முக்கியமான நன்மைகள் கீழே சுருக்கமாய்க் குறிக்கப்பட்டுள்ளன:—

(1) விதையடிக்க அரைமணி செல்லும். விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு 5 நிமிஷத்துக்குமேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும்போது விதை எடுப்பதனால் 14 நாளில் நன்றாய் வாசியாய்விடும். மற்ற மாடு ஆடானால் விதை எடுத்தவுடனே மந்தையிற்பற்றி விட்டுவிடலாம். பின்பு அதைப்பற்றிக் கவனிக்கவேண்டியதே யில்லை. விதை அடித்த வேதனை தீர்ந்து வாசியாக அநேகவாரம் செல்லும். அநேக சமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்தப் பிராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் பிராணிகள்படும் துயரத்தைப்பார்த்துச் சற்று முந்தியே விட்டுவிடுவதால் நமது உத்தேசம் சில சமயங்களில் நிறைவேறுகிறதில்லை. அப்போது அது சரியானபடி பொலியமுடியாதுபோனாலும் (கள்ளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந்தொல்லையாயிருந்துவரும்.

(4) இந்த சிகிச்சை சீக்கிரத்தில் முடிந்துபோகிறதினால் இத்தேசத்தில் விதை எடுக்கப்போகும் பிராணிகளுக்கு (மயக்கந்தர) க்ளோரபாரம் என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிறபக்ஷத்தில் கால்நடை வைத்தியர் அந்தப்படிசெய்வார். அப்போது அந்தமிருகங்களுக்குச் சற்றும் வருத்தம் தோற்றாது போகும். இரண்டு வயதாகிறவரையில் மிருகங்களுக்குக் காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்திலிருந்து வருகிறது. அநேக சமயங்களில் 3 அல்லது 4வயது வரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப்போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்றால் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில்புறமும் கனத்து லட்சணமில்லாமல் போகிறது. இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்குப் போகும் சத்து நாலாபக்கம் சமமாய்ப்பரவி அது உயர்ந்து வளர்ந்து வயது வரும்போது சாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய மிருகங்களுக்குக் காயெடுக்கவேண்டிய வயது கீழே குறிக்கப்பட்டிருக்கிறது-

குதிரை கழுதைகளுக்கு	...	1 முதல் 2 வயது.
மாடு	...	3 மாதம் முதல் 1 வருஷம்.
ஆடு, வெள்ளாடு ...	...	1 முதல் 3 மாதம்.

முன்சொல்லியபடி பிரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்தியரையாவது நியமித்திருக்கிறார்கள். அவரைத் தாலுக்காவுக்கு ஒரு மாதமாகத் தனக்கேற்பட்டிருக்கும் தாலூக்காக்கள்தோறும் சுற்றிவரத்திட்டம் செய்திருக்கிறார்கள். அவர் 4 முதல் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு தாலூக்காவுக்கும் வருவார். எந்தக் கிராமத்தாருக்காவது விதை எடுக்கவேண்டிய கால்நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ள வேண்டியது. அவர் கால்நடைவைத்தியரை அந்தக் கிராமத்திற்குப்போக எழுதிவிடுவார்.

எப். வேர்

ஸிவில்வெடரினரி சூப்பிரிண்டாண்டு சென்னை.

ரஸவாத நிபுணன்

[ஒரு சிறு கதை]

முன் ஒரு காலத்தில் ஒரு திரிகைக்காரனிருந்தான். அவன் எப்போதும் தன் திறமையைப்பற்றியும், தன் புத்திரியின் திறமையைப்பற்றியும், தற்புகழ்ச்சியாய்ப் பேசுவதுண்டு.

ஒருநாள் பல ஆட்கள்கூடியிருக்கும் ஒரு இடத்தில் வைத்து, வழக்கம்போல் தன் மகளுக்கு வைக்கோலைப் பொன்னாக நூற்கமுடியுமென்று புகழ்ச்சியாய்ச் சொன்னான். இதைக்கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் அவ்வூர் அரசனிடம் சென்று தற்பெருமையாய்ப் பேசும்திரிகைக்காரன் மகள் சாமார்த்தியத்தைப்பற்றித்தெரிவித்தான். இதைக்கேட்டவுடனே அரசன் அந்தத் திரிகைக்காரனை வருவித்து அவனது மகளை, வைக்கோலைப் பொன்னாக நூற்கமுடியுமா அல்லவா என்று பரிசோதிப்பதற்காக, மறுநாள் அரண்மனைக்குக் கொண்டுவர உத்தரவுகொடுத்தான். தற்பெருமையுடைய திரிகைக்காரன் இதைக் கேட்டு மிகவும் பயந்து, வீட்டுக்குப்போய் தன் மகளிடம் நடந்தவை யாவும் சொன்னான். இதைக்கேட்ட அவன் மகள் மிகவும் பயந்து அழ ஆரம்பித்தாள். ஏனெனில் அவளுக்கு வைக்கோலைப் பொன்னாக நூற்கவோ சாதாரண நூல் நூற்கவோ தெரியாது. தங்களுக்குக்காலையில் என்னநேரிடுமோஎன்ற பயத்தால் தகப்பனும் மகளும் அழுதழுது இராத்திரியைக் கழித்தார்கள்.

மறுநாள் திரிகைக்காரன் தன்மகளை அரசன் சமுகத்திற்கு இட்டுக் கொண்டுபோனான். அரசன் திரிகைக்காரனை அரண்மனையின் வெளியே தள்ளிவிடும்படி உத்தரவு கொடுத்துவிட்டு அவன் மகளைமேல்மாடியில் ஒரு அறைக்குக்கூட்டிக்கொண்டுபோனான். அவ்வறையில் ஒருராட்டு யந்திரமும் வைக்கோல குவியல்களும் இருந்தன. உடனே அரசன் அப்பெண்ணைப்பார்த்து "இவ்விடத்திலுள்ள வைக்கோலை எல்லாம் நாளைக்காலை ஆறு மணிக்குள் பொன்னாக நூற்கவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் உன் தலையை வெட்டி விடுவேன்" என்று சொல்லிவிட்டு வெளியேபோய் கதவைப் பூட்டிவிட்டான்.

அவ்வேழைப்பெண் ஒன்றும் செய்யத்தோன்றாமல் அழ ஆரம்பித்தாள். இவள் இப்படித் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது திடீரென பூட்டியிருந்த கதவு திறக்கப்பட்டது. திறந்ததும் ஒரு அடி நீளமுள்ள ஒரு மனிதன் உள் வந்தான். அம்மனிதனது தாடி அவனைப்போல ஒருபங்குநீளமுள்ளதாயிருந்தது. இந்தக்குள்ளனைக்கண்டவுடன் அப்பெண் தன் கண்களைத் துடைத்தாள்

"மாதே ! நீ ஏன் அழுது உன்னழகிய கண்களை கோவைப்பழம் போல் சிவக்கச்செய்கின்றாய் ?" என்று அக்குள்ளன் கேட்டான். அதற்கு அவள் "ஐயா யான் என்செய்வேன் என் தகப்பன் வாய்மதத்தால் இதெல்லாம் வந்தது. இப்போது என்முன்னிருக்கும் வைக்கோலை எல்லாம் நாளைக்காலை ஆறுமணிக்குமுன் பொன்னாக நூற்காவிட்டால் என் தலையை வெட்டிவிடுவதாக அரசன்கட்டளையிட்டிருக்கிறான்." என்றுசொல்லி அழ ஆரம்பித்தாள். "நீ அழுவதில் பிரயோஜனமில்லை. எல்லாம் கடைசியில் சரியாகவரும்" என்றுசொல்லிவிட்டுப்பின்னும் கேட்பானாயினன். "சரி இந்த வைக்கோலை எல்லாம் நான் பொன்னாக நூற்பதாயிருந்தால், நீ எனக்கு என்ன தருவாய்." அதற்கு அவள் "ஐயா என் கழுத்தில் கிடக்கும் சவடியைத் தருகிறேன்" என்றுசொன்னாள். "நல்லது சவடியைக்கொடு" என்று வாங்கிக்கொண்டு ராட்டு யந்திரத்தில் வைக்கோலை நூற்க ஆரம்பித்தான். வைக்கோல் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையவும் பொன் கட்டிகள் கொஞ்சங்கொஞ்சமாகக் கூடவும் ஆரம்பித்தன. விடிந்தபொழுது ஒரு துண்டு வைக்கோலாவது மிச்சமிருக்கவில்லை. வைக்கோல் குவியல்களெல்லாம், பொற்கட்டிகளாக மாறின. வேலைமுடிந்தவுடனே அக்குள்ளன்மறைந்துவிட்டான்.

மறுநாள் காலை ஆறுமணி சமயத்தில் அரசன் அறைக்குள் வந்தான். வீடுநிறைய வைக்கோலுக்குப்பதிலாகபொன்கட்டிக்குவியல்கள் காணப்பட்டன. அரசன் சந்தோஷத்தால் தன் கைவிரலிலிட்டிருந்த மோதிரத்தை திரிகைக்காரன் மகளுக்கு இனாமாகக்கொடுத்து அவளைத் தன்னுடன் காலைப்போஜனம் அருந்தும்படி கேட்டுக்கொண்டான். அவளும் சம்மதித்து அரசனுடன் காலைப்போஜனம் அருந்தினாள். அருந்தியபின் வீட்டுக்குப்போகலாமென்று சந்தோஷமாக இருக்கும்போது அரசன் அவளை முன்னிலும் பெரிய அறை ஒன்றிற்கு இட்டுக்கொண்டுபோனான். அவ்வறையிலும் வைக்கோல் குவியல்கள் நிரம்பியிருந்தன. அவைகளையும் பொன்னாக நூற்கவேண்டுமென்று அரசன் கேட்டுக்கொண்டான். அவள் ஒன்றும் செய்யத்தோன்றாமல் அழஆரம்பித்தாள்.

உடனே அக்குள்ளன் தோன்றி "நான் உன்னுடைய வேலையைச்செய்வதாயிருந்தால் நீ எனக்கு என்ன தருவாய்" என்றுகேட்டான். அதற்கு அவள் "என்னிடம் அரசன் இன்று காலையில் தந்த மோதிரத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அது வேண்டுமானால் தருகிறேன்" என்றாள். அம்மோதிரத்தைக் கழற்றிவாங்கிக்கொண்டு அக்குள்ளன் வைக்கோலை நூற்று பொற்கட்டிகளாக்கினான்.

மறுநாள் காலையிலரசன் வந்து வைக்கோலெல்லாம் பொன்னாக மாறியிருப்பதைக்கண்டு சந்தோஷப்பட்டான். பின் அவளை வைக்கோலால் நிரப்பப்பட்டிருந்த ஒரு பெரிய அறைக்குக்கொண்டுபோய், அவ்வைக்கோலை எல்லாம் அவள் மறுநாள் காலையில் ஆறுமணிக்குமுன் பொன்கட்டிகளாக நூற்பதாயிருந்தால் அவளைத் தன் பட்டத்து இராணி ஆக்குவதாகச்சொல்லிவிட்டு ஆகாரம் ஒன்றும் கொடுக்காமல் கதவை பூட்டிவிட்டுப்போய் விட்டான். கொஞ்சநேரத்தில் குள்ளன் வந்து "இன்று உன் வேலையை நான் செய்வதாயிருந்தால் நீ எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டான். 'என்னிடம் இப்போது உனக்குத் தர ஒன்றுமில்லை." என்று அவள்மறுமொழிசொன்னாள். பின் அவன் "அப்படியானால் நீ இராணியானபின் உனக்கு பிறக்கும் முதல் குழந்தையை எனக்குக்கொடுப்பதாக வாக்குக்கொடுப்பாயா" என்று கேட்டான். அதற்கு அவள் சம்மதித்தாள். உடனே அவன்வேலைசெய்ய ஆரம்பித்தான். வெகுசீக்கிரத்தில் வைக்கோலை எல்லாம் பொற்கட்டிகளாக மாற்றிவிட்டு மறைந்து விட்டான். மறுநாளரசன் வந்து பார்த்தபோது வைக்கோலுக்குப்பதிலாக பொன் கட்டி குவியலாயிருப்பதைக்கண்டு, வெகு சந்தோஷத்துடன்' தான் முந்தினநாள் வாக்குக் கொடுத்தபடி அவளைக் கல்யாணம் செய்துகொண்டான்.

ஒருவருஷமும்சிலமாதங்களும்சந்தோஷமாகச்சென்றன. திரிகைக்காரன் மகளாகிய இராணிக்கு ஒரு குழந்தை பிறந்து இரண்டு மூன்று மாதங்களுக்குப்பின் ஒருநாள் அவள் தன்குழந்தையை வைத்துத் தாலாட்டிக்கொண்டிருக்கும்போது திடீரெனக்கதவு திறந்தது. உடனே முன்னிவளுக்குபகாரம் செய்த குள்ளன் உள்வந்தான். வந்து இராணிக்கு வந்தனம் செய்தபின் அவள் தனக்குமுன்னொருகாலத்தில்வாக்குக் கொடுத்திருந்தபடி குழந்தையைக்கொடுக்கும்படி கேட்டான். அவள் திடுக்கிட்டெழுந்து முன் போன காரியத்தை மறந்துவிடும்படியும், வைடூரியம், கோமேதகம், முதலிய மணிகளைக்கொடுப்பதாகவும் வேண்டினாள். அக்குள்ளன் மாட்டேனென்றான். அவளழுது கதறினாள். கடைசியில் கருங்கல் போன்ற அக்குள்ளன் மனம் உருகிற்று.

"நீ மூன்று தினங்களுக்குள் என் பெயரைச்சொல்வதாயிருந்தால் உன் குழந்தை எனக்கு வேண்டாம். நீயே வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு மறைந்து போனான். இராணி உடனே காற்றுப்போல் பறக்கும் தூதவரை வருவித்து ஊர்முழுதும் சுற்றி அதிசயமான பெயர்களை எல்லாம் அறிந்துவரக்கட்டளையிட்டு நாலா திசைக்குமனுப்பினாள். மறுநாள் குள்ளன் வந்தான். அப்போது இராணி பல விசேஷமானபெயர்கள் சொல்லியும் அவன் அவை ஒன்றும் தன்பெயரல்லவென்றுசொல்லிவிட்டுப்போய்விட்டான். இரண்டாம்நாள்வந்தும் அக்குள்ளன் பெயரை இராணிக்குச்சொல்ல முடியவில்லை. மூன்றாம்நாள் காலை குள்ளன் வருவதற்குக்கொஞ்சநேரத்துக்குமுன் ஒரு தூதுவன் விரைந்தோடிவந்து இராணியைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். உடனே வேலைக்காரர் அவனை இராணியிடம் இட்டுக்கொண்டுபோனார்கள். இராணியைக்கண்டவுடன் அவன் இராணிக்கு அறியவேண்டியதைச்சொன்னான். அதாவது "நேற்று வெகுதூரத்திற்கப்பாலிருக்கும் ஒருவனத்தில் அலைந்துகொண்டிருக்கும்போது நான் ஒரு மலையடிவாரத்திற்கு வந்தேன், அங்கு ஒரு சிறு வீடு இருப்பதையும் வெகுதூரத்தில் ஒரு தீஎரிவதையும் கண்டேன். கொஞ்சநேரத்தில் ஒரு குள்ளன் தோன்றி அத்தீயைச்சுற்றி ஏதோ சத்தமிட்டுக்கொண்டு ஆடத்தொடங்கினான். என்ன சொல்கிறானென்று கேட்பதற்காகக் கிட்டப்போனபோது, நான் இராணி குழந்தையை நாளைக்கு எடுப்பேனென்றாவது என் பெயர் ரஸவாதநிபுணன் என்றாவது அவர்களுக்குத்தெரியாது என்று சத்தமிட்டுப்பாடுவதைக் கேட்டு உடனே வந்து தங்களுக்கு அறிவித்தேன் என்றான்.

இராணி சந்தோஷம் கொண்டு அவனுக்குக்கொஞ்சம் திரவியம் கொடுத்தனுப்பிவிட்டு சந்தோஷமாயிருந்தாள்கொஞ்சநேரத்தில்குள்ளன் வந்தான். வந்தவுடன் இராணி "உன் பெயர் 'ரஸவாதி' தானா என்று கேட்டாள். அதற்கு அவன் இல்லை என்றான். அப்படியானால் உன் பெயர் "ரஸவாதநிபுணன்" தானா என்று கேட்டாள். உடனே அவன் கோபாவேசத்தோடு "ஒரு மந்திரவாதி உனக்குச்சொன்னான். ஒரு மந்திரவாதி உனக்குச்சொன்னான்" என்று சொல்லிக்கொண்டே மறைந்துபோனான். அதன்பின் அவன் இராணியைவருத்தப்படுத்தவேயில்லை.

L. A. RATNA RAJ.

சமாசாரத்திரட்டு.

——————::——————

அதிசயச்செயல்:—எட்டா ஜில்லாவில் ஸஹவோர் என்னும் ஊரில் ஒரு வெள்ளாடு இரண்டு ஆட்டுக்குட்டிகளை ஈன்றதாம். அவற்றில் ஒன்று வாலில்லாமலும், குரங்கின் முகத்தோடும், எட்டு கால்களுடனும் பிறந்து இறந்து விட்டதாம். ஒன்றுமாத்திரம் தன் ஸ்வய ரூபத்துடன் உயிரோடிருக்கின்றது

* * * * *

பேசும் நாய்கள்.:—ஜெர்மனியில் படிக்கவும் எழுதவும் எழுத்துக்கூட்டவும் கூடிய சக்தியுள்ள ஒரு நாய் கண்டு பிடிக்கப்பட்டதாம். தற்செயலாய் அதினுடைய சொந்தக்காரனாகிய மான்ஹீம் என்னும் ஊரின் மொணெல் என்பவன் கேட்கும் இலக்கத்தை தன் பாதங்களினால் ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டுபோய் நாம் கேட்கும் இலக்கப் பொருளைக் கண்டுபிடித்து எடுத்துக்கொடுக்கிறதாம். இன்னும் அநேக அற்புதச்செயல்கள் செய்யக்கூடிய சக்தியுள்ளதாம்.

* * * * *

பழைய அரண்மனைகள் கண்டுபிடிக்கப்பட்டன.:—அநுராதபுரத்தில் பழைய மன்னாரு ரோட்டின் சந்தியில் நாலு அரண்மனைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சுற்றி அகழிகளும் இருக்கின்றன.

* * * * *

சீலோன் இருப்புப்பாதை.—1914-ம் ௵ ஜனவரி ௴ இந்தியா சிலோன் இருப்புப்பாதை திறக்கப்படுமென்று செய்யப்பட்ட தீர்மானம் தள்ளி வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

* * * * *

பரிதாபச்செய்கை.—பாதகர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பஞ்சாப்பிலுள்ள ஒரு கலியாணமான பதினாறு வயதுள்ள பெண்ணை அபகரித்துவந்து ஜெயிந்தர் என்னுமிடத்தில் மூன்று மாதம் அடைத்துவைத்திருந்து பிறகு ரெயில் மார்க்கமாய் பார்கார் ஜில்லாவைச் சேர்ந்த தங்தோஜான் முகம்மத் என்னுமிடம் கொண்டுபோய் ஜம்முஎன்ற மற்றொருவனைச் சேர்த்துக்கொண்டு பெண்ணை விற்கப்போன வழியில் பீதி ஸ்டேஷனில் நிற்க, அப்பெண்ணின் அழுகையைக் கேட்ட ரெயில்வே போலிஸ் உத்தியோகஸ்தர் பெண்ணிடம் வந்து வரலாற்றை விசாரித்து ஜம்முவையும், ஜெயிந்தர் இப்ராஹிம் என்பவனையும் கைதுசெய்து இருவருக்கும் சுக்கூர் ஜில்லா ஜட்ஜ் அவர்களால் ஆறு வருஷதீபாந்தரசிட்சை விதிக்கப்பட்டது.

* * * * *

விநோத விவாகம்:—பிராஞ்சுதேசவரனுக்கும் அமெரிக்கா ஐக்கியமாகாணப் பெண்ணுக்கும் பாரிஸ் நகரத்தின் சமீபத்திலுள்ள ஒருகிராமத்தில் விவாகம் நடந்ததாம். அவ்விருவரும் டென்னிஸ் பந்து விளையாடும் சமயம் உடுக்கும் உடையோடு சென்றனராம். விவாகம் முடிந்தபிறகு ஸின் நதிக் கரையில் போஜன மேஜைகள் போட்டு விருந்து நடந்ததாம். தம்பதிகள் ஆசீர்வதிக்கப்பட்டதும் தம்பதிகள் சரேலென்று ஆற்றில் குதித்து டாவில் என்னும் ஊருக்கு நீந்திப்போயச் சேர்ந்தார்களாம். நாகரீக ஜாதியில் இவ்வித விநோதம் நேர்ந்ததும் ஓர் ஆச்சரியமே.

* * * * *

போஷகர்வரவு.

ஸ்ரீமாந் S. Rm. M. Ct. பெத்நாச்சி செட்டியாரவர்கள்

ரூ. 30. 0. 0.

சந்தாதார்வரவு.

" S. கோலப்பபிள்ளையவர்கள், திருவநந்தபுரம். ரூ. 2. 0. 0.

THE COMPLETE LETTER WRITER

4th Edition Revised and Enlarged by

HARI CHARN DAS

PRICE RE. 1. (*full cloth gilt 320 pages*)

An universal Guide to the Art of letter writing for all positions of life. It contains 24 Chapters—Private Correspondence, News Papers, Doctors. School Correspondence, Government and Commericial, Collectors Office' Attorneys Vakils and Muktears, Steamers, Police, Municipality, Incometax, Railways, Tramways, Medical Depatment, Postal Department, Telegraph Department, precis Writing, Drafting Docketing, Book keeping, Miscellaneous forms Miscellaneous Application forms, Forms of Address paper Currency. Abberviations and Daily wages.

MARTICULATION ESSAY—by Hari Charan Das. Very useful book for School Boys. Price As. 8.

ENGLISH ETIQUETTE & ENGLISH PROVERBS.

A very useful Book for those who come in contact with Englishmen Price As. 5. only.

CHILD'S EASY CONVERSATION, 2nd ED.

If you want to speak in English fluently you should buy the above book It will teath both you and your children to speak in English within two or three months. Price As. 10 only.

M. L. Das & Co, BOOK-SELLERS & PUBLISHERS.

122, Baitakhana Road. Calcutta,